

## இறுதிச் செபம்:

அதிசவில் ஒருவரை செபம் செய்ய அழைக்கலாம்.

அதிகமான சுமைகளோடு இருக்கும் அனைத்து குடும்பங்களுக்காகவும், அன்றாட வாழ்க்கையின் அழுத்தங்களையும், கோரிக்கைகளையும் சமாளிக்க முடியாமல் இருப்போர்; எதிர்நோக்கின்றி கலக்கத்தில் இருப்போர் ஆகிய அனைவருக்காகவும் மன்றாடுவோம். ஆண்டவரே நீர் அவர்களோடு இருந்து அவர்கள் உள்ளத்திற்கு ஆறுதலும் அமைதியும் அளித்தருளும். எதிர்நோக்கு, அமைதி மற்றும் இளைப்பாறுதலைத் தாரும். ஒரே குடும்பமாக உண்மையாக இருக்க அவர்களுக்கு உதவியருளும். ஆமென்.

## முடிவு பாடல்:

தாவீதின் குலமலரே
ஒளி தாங்கிடும் அகல் விளக்கே
எம்மைக் காத்திடும் ஆரணங்கே
அருள் சுரந்திடும் தேன்சுனையே

1. இறைவனே முதலில் உனைத் தெரிந்தார்
   கறை சிறிதில்லாக் காத்திருந்தார் - 2
   மறையவர் புகழும் மாமரியே
   கரை சேர்ப்பதுவே உன் பணியே

2. மக்களின் மனமே மகிழ்ந்திடவே
   நற்கனி சுதனை எமக்களித்தாய்
   கற்றவர் மற்றவர் யாவருமே
   பொற்பதம் சேர்ந்திட வேண்டுமம்மா

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மே 2021

# அதிசசிந்தனை

## நன்மையிலும் மற்றும் சோதனை நாட்களிலும் ஒன்றித்திருப்பது

நிகழ்வு: **அனைத்துலக குடும்பங்களின் தினம்**

சமூக ஊடகப் போக்கு: **#theyaintheavy**

**முன்னுரை:** ஐக்கிய நாடுகளின் பொது சபை கடந்த 15–05–1993 ஆம் ஆண்டு அனைத்துலக குடும்ப நாளை அறிவித்தது. இந்த சிறப்பு நாள் முதன் முதலில் மே 15, 1994 அன்று கொண்டாடப்பட்டது. குடும்பங்களின் முக்கியத்துவத்தை மதிக்கும் வகையில் இது அனுசரிக்கப்படுகிறது. சமூகத்தின் அடித்தளம் குடும்பங்களே. நம்மை உருவாக்கும் அதிகமான ஆண்டுகள் நம் குடும்பங்களோடு தான் செலவிடப்படுகின்றன. மேலும் குடும்ப உறுப்பினர்கள் தான் நம்முடைய வாழ்க்கையில் மிகமுக்கியமான நபர்களாக இருக்கக்கூடும். எனவே குடும்பங்கள் கொண்டாடப்பட வேண்டும். நம்முடைய சொந்த குடும்பத்தில் தொடங்கி, பின்பு சமூகத்தில் உள்ள குடும்பங்கள் கொண்டாடப்பட பலவழிகளைக் கண்டுபிடித்து அதற்காக நம்முடைய நேரத்தைச் செலவிடுவோம்.

(குடும்பங்கள் தினத்திற்காக ஐக்கிய நாடுகளின் சபை வெளியிட்ட செய்தி – மே, 15, 2012)



# தொடக்கச் செபம்:

அதிசவில் ஒருவரை செபம் செய்ய அழைக்கலாம்.

விண்ணுலகில் உள்ள எங்கள் தந்தையே! அனைத்துலக குடும்பங்கள் தினத்தை நாங்கள் நினைவுகூருகின்றோம். அனைத்து குடும்பங்களும் ஒருவருக்கொருவர் உண்மையான வாழ்வு மற்றும் அன்பின் ஆதாரமாக மாற அருள் தாரும். திருமண அருளடையாளத்திற்காகவும், பெற்றோராகவும் திகழ அழைப்புப் பெற்றவர்களின் எண்ணங்களையும் செயல்களையும் நீரே வழிநடத்தும். இதனால் அவர்கள் தங்கள் குடும்பங்களின் நலனுக்காகவும், உலகில் உள்ள அனைத்துக் குடும்பங்களுக்காகவும் உழைக்க உதவியருளும்.

# தொடக்கப்பாடல்:

வருவாய் இன்று கிறிஸ்துவ குலமே
கிறிஸ்து விடுத்த அழைப்பினை ஏற்று

1. வரிவேத நிறைவாம் வார்த்தையளிக்கும்
விருந்தினை உண்ண விரைவாய் குலமே
உண்பவர் எல்லாம் ஓர் குலமாக
உன்னத பலியை உவந்தே செலுத்த

2. திருநீராட்டால் வந்தது உரிமை
திருப்பலி தனையே செலுத்தும் அருமை
கிறிஸ்துவை அறியா உலகுக்குப் புதுமை
கிறிஸ்துவக் குலமே உந்தன் பெருமை

3. கிறிஸ்துவின் வழியில் வருவது குருவே
கீதங்கள் முழங்க நுழைவதும் அவரே
பாவங்கள் போக்கிப் பகைமையை நீக்கும்
மீட்பின் பலியை மீளவும் செலுத்த

# உரையாடல்:

80 ஆண்டுகளுக்கும் மேலாக திருமணமான தோமஸ் மற்றும் எலி தம்பதியினர் தற்போது இந்தியாவின் கேரள மாநிலத்தில் வசித்து வருகின்றனர். 1932 ஆம் ஆண்டு அவர்கள் திருமணம் செய்துகொண்டனர். திருமணமாகி 83 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் அவர்கள் இந்தியாவில் மிக நீண்ட கால திருமணமான தம்பதியராக உள்ளனர். அவர்களைப் பொறுத்தவரை வெற்றிகரமான திருமண வாழ்க்கைக்கு இரண்டு வார்த்தைகளைக் கூறுகின்றனர். அன்பு மற்று சகிப்புத்தன்மை. அவர்களுக்கு எட்டு பிள்ளைகள், 18 பேரக்குழந்தைகள் மற்றும் 18 கொள்ளுப் பேரப்பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் தங்களுடைய 83 ஆவது திருமண நிறைவை கடந்த 2015 ஜனவரி 31 ஆம் தேதி அவர்களுடைய பிறந்த இடமான இடுக்கி மாவட்டத்திலுள்ள தொடுபுழாவில் கொண்டாடினர்.

ஒரு சிறிய கிராமப்புறத்தில் விவசாயத்தை வருமானமாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்த தோமஸ், அந்தக் கால வழக்கப்படி தன்னுடைய 18 ஆவது வயதில் அதே ஊரில் பிறந்த 15 வயதான எலி என்பவரைத் திருமணம் செய்தார். அவர்களின் திருமண நிச்சயதார்த்தம் அன்று தம் துணைவியான எலி– யை முதன் முதலில் சந்தித்த அந்த நிகழ்வு, தம்முடைய வாழ்வின் மிக மகிழ்ச்சியான தருணங்களில் ஒன்று என்று தோமஸ் குறிப்பிடுகிறார். அவர்களுடைய திருமணம் மிகவும் எளிமையாக நடைபெற்றது. அவர்களுக்கு நான்கு குழந்தைகள் பிறந்த பின்பு தான் அவர்களால் முதன்முதலாக ஒரு புகைப்படம் எடுக்க முடிந்தது.

இந்தத் தம்பதியினருக்கு அனைத்தும் எளிதாக அமைந்துவிடவில்லை. ஒவ்வொரு திருமணத்திலும் பல ஏற்றத் தாழ்வுகள் இருப்பதுபோல் இவர்களுக்கும் இருந்தது. அவர்களுடைய திருமண வாழ்வைக் கொண்டாடிய அளவுக்கு துன்பங்களும் இருந்தது. இதில் அவர்கள் தங்களுடைய முதல் குழந்தையை இழந்தது மட்டுமல்ல; மிகவும் மோசமான வறுமையையும் அனுபவித்தார்கள். இது ஒரு போராட்டமாக இருந்தாலும், அதைத் துணிவுடன் எதிர்கொண்டனர். " நாங்கள் இருவரும் கடினமாக உழைத்தோம். இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறோம் என்று தோமஸ் கூறுகிறார். உங்களுடைய திருமண உறவில் எப்போதாவது நீங்கள் சலிப்படைந்தது உண்டா? என்று கேட்டபோது அவர் ஆச்சரியத்துடன், "எப்படி சலிப்பு ஏற்படும்? எந்த நிலையிலும் நான் அவ்வாறு உணர்ந்ததில்லை என்று பதில் அளித்தர். அவருடைய மகன்களில் ஒருவரான ஜேம்ஸ், இவர்கள் மிகவும் சிறந்த தம்பதி மற்றும் சிறந்த பெற்றோர் என்பதை ஒப்புக்கொள்கிறார்.



*(Source: The News Minute, January 26, 2015)*

**உங்களுடைய எண்ணங்களை அதிச உறுப்பினர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்:**

- மகிழ்ச்சி மற்றும் வெற்றிகரமான திருமண வாழ்வின் இரகசியத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?
- இன்றைய குடும்பங்கள் எதிர்நோக்கும் சில முக்கியமான சவால்கள் என்ன?
- இன்பத்திலும் துன்பத்திலும் குடும்பங்கள் ஒற்றுமையாக நிலைத்து இருக்கக்கூடிய வழிகள் என்ன?

# இறைவார்த்தை:

## கலாத்தியர்: 6: 2-5

ஒருவர் மற்றவருடைய சுமைகளைத் தாங்கிக் கொள்ளுங்கள்; இவ்வாறு கிறிஸ்துவின் சட்டத்தை நிறைவேற்றுவீர்கள். பெருமைக்குரியோராய் இல்லாதிருந்தும், தம்மைப் பெரியவர் எனக் கருதுவோர் தம்மையே ஏய்த்துகொள்ளுகின்றனர். ஒவ்வொருவரும் தம் செயல்களை ஆய்ந்து பார்க்கட்டும். அப்பொழுது தம்மைப் பிறரோடு ஒப்பிட்டுப் பெருமை பாராட்டாமல், தாம் செய்த செயல்களைப் பற்றி மட்டும் பெருமை பாராட்ட முடியும். ஒவ்வொருவரும் அவரவர் சுமையைத் தாங்கிக் கொள்ளட்டும்.

## சிந்தனை:

- வாசகத்தைச் சத்தமாக வாசித்து திறந்த மனத்தோடு கேட்கவும்.
- வார்த்தையோ வசனமோ உங்கள் மனதைத் தொடும் வரை மௌனமாக இதை வாசிக்கவும்.
- அந்த வார்த்தை அல்லது வசனம் வழி உங்களுக்கு தூய ஆவியார் சொல்வது என்ன?
- ஆண்டவரின் குரலுக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?
- சிறிய குழுக்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் (3-4 பேர்)

## செயல்:

- திருமணமான தம்பதியருக்கு: உங்கள் மனைவிக்கு/கணவருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். அவருடைய அன்புக்காகவும், இன்பத்திலும் துன்பத்திலும் உங்களுக்காக அவர் கொண்டிருந்த அன்பு, பொறுமை மற்றும் புரிதலுக்காகவும் நன்றி கூறி கடிதம் எழுதுங்கள்
- பெற்றோர்களுக்கு: உங்களின் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு கடிதம் எழுதுங்கள். மகிழ்ச்சியான மற்றும் துன்ப காலத்தில் ஒருவருக்கொருவர் குடும்பத்தின் ஒரு பகுதியாக இருப்பதற்கும் நன்றி கூறி எழுதுங்கள்.
- குழந்தைகளுக்கு: உங்கள் பெற்றோருக்கு ஒரு கடிதம் எழுதுங்கள். அவர்களின் அன்புக்கும், தியாகத்திற்கும், மகிழ்ச்சியான மற்றும் துன்ப நேரத்தில் உங்களுக்கு வழிகாட்டியாக இருந்ததற்காகவும் நன்றி கூறி எழுதுங்கள்



## ஆண்டவரின் இறைவேண்டல்

விண்ணுலகில் இருக்கிற
எங்கள் தந்தையே,
உமது பெயர் தூயது எனப்
போற்றப்பெறுக!
உமது ஆட்சி வருக!
உமது திருவுளம் விண்ணுலகில்
நிறைவேறுவது போல
மண்ணுலகிலும் நிறைவேறுக!
எங்கள் அன்றாட உணவை
இன்று எங்களுக்குத் தாரும்.
எங்களுக்கு எதிராக குற்றம்
செய்வோரை
நாங்கள் மன்னிப்பது போல,
எங்கள் குற்றங்களை மன்னியும்.
எங்களை சோதனைக்கு
உட்படுத்தாதேயும்.
தீயோனிடமிருந்து எங்களை
விடுவித்தருளும்.
ஆமென்.

## மன்றாட்டுக்கள்:

ஆவியாரை தந்தை நமக்குத் தந்ததால், அவர் நம்மோடு இருக்கிறார் என்பதை அறிந்துக்கொள்கிறோம். இப்பொழுது நம்பிக்கையோடு நாங்கள் உம்மிடம் வேண்டுகிறோம்.

**பதில்: தந்தையே, உம் தூய ஆவியாரைத் திருச்சபையிடம் அனுப்பியருளும்.**

தூய ஆவியாரில் திருமுழுக்கு வழியாக அனைவரையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்று நீர் விரும்புகிறீர்:- மனத்திலும் உள்ளத்திலும் இறைமக்கள் அனைவரையும் ஒன்றாக ஈர்த்தருளும்.

உமது அன்பினால் நிரப்பும்படியாக உமது தூய ஆவியாரை பூவுலகிற்கு அனுப்பினீர்:- நீதியிலும் அமைதியிலும் மனிதர் இவ்வுலக அரசைக் கட்டி எழுப்புவார்களாக.

ஆண்டவராகிய கடவுளே, அனைத்து மாந்தர்க்கும் தந்தையே, சிதறுண்ட உம் பிள்ளைகளிடத்தில் நம்பிக்கையின் ஒற்றுமையைக் கொணர்ந்தருளும்:- உம் தூய ஆவியாரின் ஆற்றலால், உலகை உயிருள்ளதாக்கியருளும்.

ஆவியாரின் செயலால், நீர் அனைவரின் மனத்தையும் புத்துணர்வு பெறச் செய்கிறீர்:- நோயுற்றவரை குணமாக்கி துன்புற்றோர்க்குத் துணைபுரிந்து, அனைத்து மாந்தர்க்கும் மீட்பைக் கொணர்ந்தருளும்.

தூய ஆவியாரின் வழியாக நீர் உமது மகனை இறந்தோரினின்று உயிர்ப்பித்தீர்:- நாங்கள் உமது அரசுக்கு வரும்போது உம் ஆவியாரின் வல்லமையால் எங்களையும் எழுப்பியருளும்.

## இறுதி செபம்:

மாட்சிமை மிகுந்த ஆண்டவராகிய கடவுளே! எல்லா இனத்தவர்க்கும் எல்லா நாட்டினர்க்கும் இடையே பரந்து விளங்கும் அனைத்துலக திருச்சபையை, இன்று நாங்கள் கொண்டாடும் மறைப்பொருளால் நீர் தூய்மையாக்குகிறீர். தூய ஆவியாரின் கொடைகளை அனைத்து மானிட இனத்தின் மேலும் பொழிந்தருளும். நற்செய்தி முதன்முதலில் போதிக்கப்பட்ட அக்காலத்தில் நீர் செய்ததை இக்காலத்தில் உம் இறைமக்களின் உள்ளங்களில் நிறைவுறச் செய்வீராக.

உம்மோடு தூய ஆவியின் ஒன்றிப்பில் இறைவனாய் என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதித்து, தீமைகள் அனைத்தினின்றும் பாதுகாத்து, நம்மை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்வாராக. ஆமென்.

INTERNAL CIRCULATION ONLY

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

மே 2021

# திருவழிபாட்டின் திருமணிகள்

**பெந்தக்கோஸ்து ஞாயிறு**
**திருப்புகழ்மாலை**

முதல்: இறைவா, எமக்குத் துணைபுரிய வாரும்
எல்: ஆண்டவரே, எமக்குத் துணைபுரிய விரைந்து வாரும்
முதல்: தந்தைக்கும் மகனுக்கும்...

## ஒளியாம் இறையே வாராய்



ஒளியாம் இறையே வாராய்
எளியோர் நெஞ்சம் தனிலே
ஒளியாம் இறையே வாராய்

1. விண்ணில் வாழும் விமலா
மண்ணில் வாடும் மாந்தர்
உம்மில் என்றும் வாழ
எம்மில் எழுமே இறைவா
ஒளியே எழிலே வருக

2. நீரும் மழையும் முகிலால்
பூவும் கனியும் ஒளியால்
உயிரும் உருவும் உம்மால்
வளமும் வாழ்வும் உம்மால்
ஒளியே எழிலே வருக

3. அருளே பொங்கும் அமலா
இருளே போக்க வா வா
குறையை நீக்கும் நிமலா
நிறையை வளர்க்க வா வா
ஒளியே எழிலே வருக 2

**முன்மொழி** 1: ஆண்டவரின் ஆவியார் பூவுலகம் முழுவதையும் நிரப்பியுள்ளார். அல்லேலூயா.

## திருப்பாடல் 110 3:1–5,7

ஆண்டவர் என் தலைவரிடம்,
'நான் உம் பகைவரை உமக்கு
கால்மணையாக்கும்வரை
நீர் என் வலப்பக்கம் வீற்றிரும்' என்று உரைத்தார்.

வலிமைமிகு உமது செங்கோலை
ஆண்டவர் சீயோனிலிருந்து ஓங்கச் செய்வார்;
உம் எதிரிகளிடையே ஆட்சி செலுத்தும்!

நீர் உமது படைக்குத் தலைமை தாங்கும் நாளில்
தூய கோலத்துடன் உம் மக்கள் தம்மை
உமக்கு உவந்தளிப்பர்;
வைகறை கருவுயிர்த்த பனியைப்போல
உம் இளம் வீரர் உம்மை வந்தடைவர்.

'மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர்
என்றென்றும் குருவே'
என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார்;
அவர் தம் மனத்தை மாற்றிக் கொள்ளார்.

என் தலைவர் உம் வலப்பக்கத்தில் உள்ளார்;
தம் சினத்தின் நாளில்
அவர் மன்னர்களை நொறுக்குவார்.

வழியில் உள்ள நீரோடையிலிருந்து அவர்
பருகுவார்;
ஆகவே அவர் தலைநிமிர்ந்து நிற்பார்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக. தொடக்கத்திலே
இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக.

தந்தைக்கும் மகனுக்கும் ......................

**முன்மொழி** 1: ஆண்டவரின் ஆவியார் பூவுலகம் முழுவதையும் நிரப்பியுள்ளார். அல்லேலூயா.

**முன்மொழி** 2: ஆண்டவரே எருசலேமிலுள்ள உமது தூய கோவிலிலிருந்து உமது ஆற்றலை அனுப்பியருளும். எங்கள் நடுவில் நடைபெறும் உமது பணிகளை நிறைவு பெறச் செய்தருளும். அல்லேலூயா.

## திருப்பாடல் 114

எகிப்து நாட்டைவிட்டு
இஸ்ராயேலர் வெளியேறியபொழுது,
வேற்று மொழி பேசிய மக்களை விட்டு
யாக்கோபின் குடும்பம் புறப்பட்டபொழுது,
யூதா அவருக்குத் தூயகம் ஆயிற்று;
இஸ்ராயேல் அவரது ஆட்சித்தளம் ஆனது.

கடல் கண்டு ஓட்டம் பிடித்தது;
யோர்தான் பின்னோக்கிச் சென்றது.
மலைகள் ஆட்டுக் கிடாய்கள் போலும்
குன்றுகள் செம்மறிகள் போலும் துள்ளிக் குதித்தன.

கடலே! நீ விலகி ஓடும்படி உனக்கு நேர்ந்தது என்ன?
யோர்தானே! நீ பின்னோக்கிச் சென்றது ஏன்?
மலைகளே! நீங்கள் ஆட்டுக் கிடாய்கள்போல்
குதித்தது ஏன்?
குன்றுகளே! நீங்கள் செம்மறிகள்போல் துள்ளியது
ஏன்?

பூவுலகே! தலைவர் முன்னிலையில் நடுநடுங்கு!
யாக்கோபின் கடவுள் முன்னிலையில் நடுக்கமுறு!
பாறையை அவர் நீர்த்தடாகம் ஆக்குகின்றார்;
கற்பாறையை அவர் வற்றாத நீர்ச்சுனை ஆக்குகின்றார்.

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும்
மாட்சி உண்டாவதாக. தொடக்கத்திலே
இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும்
என்றென்றும் இருப்பதாக.

தந்தைக்கும் மகனுக்கும் ......................

**முன்மொழி** 2: ஆண்டவரே எருசலேமிலுள்ள உமது தூய கோவிலிலிருந்து உமது ஆற்றலை அனுப்பியருளும். எங்கள் நடுவில் நடைபெறும் உமது பணிகளை நிறைவு பெறச் செய்தருளும். அல்லேலூயா.

**முன்மொழி** 3: அவர்கள் அனைவரும் தூய ஆவியால் நிரப்பப்பெற்று பேசத் தொடங்கினர். அல்லேலூயா.

## சிறுபாடல் திருவெளிப்பாடு 19: 1–2, 5–7

எல் : அல்லேலூயா.
முதல் : மீட்பும் மாட்சியும் வல்லமையும் நம் கடவுளுக்கே உரியன.
எல் : அல்லேலூயா.
முதல் : ஏனெனில் அவருடைய தீர்ப்புகள் உண்மை உள்ளவை, நீதியானவை.
எல் : அல்லேலூயா.
முதல் : கடவுளின் பணியாளர்களே, நம் கடவுளைப் புகழுங்கள்.
எல் : அல்லேலூயா.
முதல் : அவருக்கு அஞ்சி நடப்பவர்களே, சிறியோர்களே, பெரியோர்களே, நீங்கள் அனைவரும் நம் கடவுளைப் புகழுங்கள்.
எல் : அல்லேலூயா.
முதல் : உன் கடவுளாகிய ஆண்டவர், எல்லாம் வல்லவர்; அவர் ஆட்சி செலுத்துகின்றார்.
எல் : அல்லேலூயா.
முதல் : எனவே மகிழ்வோம், பேருவகையுடன் அவரைப் போற்றிப் புகழ்வோம்.
எல் : அல்லேலூயா.
முதல் : ஏனெனில் ஆட்டுக் குட்டியின் திருமண விழா வந்துவிட்டது.
எல் : அல்லேலூயா.
முதல் : மணமகளும் விழாவுக்கு ஆயத்தமாய் இருக்கிறார்.
எல் : அல்லேலூயா.

தந்தைக்கும் மகனுக்கும் ......................

**முன்மொழி** : அவர்கள் அனைவரும் தூய ஆவியால் நிரப்பப்பெற்று பேசத் தொடங்கினர். அல்லேலூயா.

## அருள்வாக்கு எபேசியர் 4 : 3 - 6

அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூய ஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழு முயற்சி செய்யுங்கள். நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பது போல, உடலும் ஒன்றே; தூய ஆவியும் ஒன்றே. அவ்வாறே ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே. எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே; அவர் எல்லாருக்கும் மேலானவர்; எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர்; எல்லாருக்குள்ளும் இருப்பவர்.

## சிறு மறுமொழி

முதல்: ஆண்டவரின் ஆவியார் பூவுலகம் முழுவதையும் நிரப்பியுள்ளார். அல்லேலூயா. அல்லேலூயா.
எல்: ஆண்டவரின் ஆவியார் பூவுலகம் முழுவதையும் நிரப்பியுள்ளார். அல்லேலூயா. அல்லேலூயா.
முதல்: அனைத்தையும் ஆண்டு நடத்துபவரும் பேசப்படும் ஒவ்வொரு வார்த்தையையும் அறிந்துக்கொள்பவரும் அவரே. அல்லேலூயா. அல்லேலூயா.
எல்: ஆண்டவரின் ஆவியார் பூவுலகம் முழுவதையும் நிரப்பியுள்ளார். அல்லேலூயா. அல்லேலூயா.
முதல்: தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக. அல்லேலூயா. அல்லேலூயா.
எல் : ஆண்டவரின் ஆவியார் பூவுலகம் முழுவதையும் நிரப்பியுள்ளார். அல்லேலூயா. அல்லேலூயா.

## கன்னிமரியின் பாடல்

முன்மொழி:
இன்றே தூய ஆவியரின் பெருநாள். அல்லேலூயா. இன்று தூய ஆவியார் நெருப்புமயமாய் சீடர்களுக்குத் தோன்றி, தமது சிறப்புக் கொடைகளை அவர்களுக்கு வழங்கினார். நம்பி, திருமுழுக்குப் பெறுபவர் மீட்படைவர் என அறிக்கையிட, திருத்தூதர்களை அவர் உலகிற்கு அனுப்பினார். அல்லேலூயா.

---

என் ஆன்மா ஆண்டவரில் களிகூருகின்றது
என் ஆன்மா ஆண்டவரை ஏத்திப் போற்றுகின்றது.
என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம்
களிகூருகின்றது.
ஏனெனில், தாழ்நிலை நின்ற தம் அடிமையைக்
கடைக்கண் நோக்கினார்.

இதோ! இந்நாள் முதல் எல்லாத் தலைமுறைகளும்,
என்னைப் பேறுடையாள் எனப் போற்றுமே.
ஏனெனில், வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும்
செயல் பல புரிந்தார். அவர்தம் பெயர் புனிதமாமே.
அவர்தம் இரக்கம் அவரை அஞ்சுவோர்க்குத்
தலைமுறை தலைமுறையாய் உளதாமே.

அவர் தமது கைவன்மையைக் காட்டினார். நெஞ்சிலே
செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்.
வலியோரை அரியணையினின்று அகற்றினார்,
தாழ்ந்தோரை உயர்த்தினார். பசித்தோரை நலன்களால்
நிரப்பினார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பினார்.

நம் முன்னோருக்கு அவர் சொன்னது போலவே,
ஆபிரகாமுக்கும் அவர்தம் வழிவந்தோர்க்கும்
என்றென்றும் இரக்கம் காட்ட நினைவுகூர்ந்து தம்
அடியானாகிய இஸ்ராயேலை ஆதரித்தார்.

**தந்தைக்கும் மகனுக்கும்...**

முன்மொழி: இன்றே தூய ஆவியரின் பெருநாள். அல்லேலூயா. இன்று தூய ஆவியார் நெருப்புமயமாய் சீடர்களுக்குத் தோன்றி, தமது சிறப்புக் கொடைகளை அவர்களுக்கு வழங்கினார். நம்பி, திருமுழுக்குப் பெறுபவர் மீட்படைவர் என அறிக்கையிட, திருத்தூதர்களை அவர் உலகிற்கு அனுப்பினார். அல்லேலூயா.